# திவ்யத்தம்பதியினர் உணர்த்தும் வாழ்க்கைத் தத்துவம்

அன்பர்களே!

இன்று பங்குனி உத்திர விழாவின் ஆறாம் திருநாள்.நம்பெருமாள் காவிரி தாண்டி உறையூர் செல்கிறார்.அங்கே கமவல்லி நாச்சியார் திருக்கோயிலில் விடியவிடிய ஏகாந்த சேர்த்தி உற்சவம் நிகழ்கிறது.புது உறவு கொண்ட மயக்கத்தில் கமலவல்லியும்,வரப்போகும் கலகத்தினை எண்ணி நம்பெருமாளும் இருக்கிறார்கள்.மறுநாள் விடியலில் பெருமாள்,திருவரங்கம் திரும்பி,உடனே சன்னிதி சேராது,கொள்ளிடக் கரை மண்டபத்திலேயே இளைப்பாறுகிறார்.

மாலை வேளை,அதீத ஆர்பாட்டம் ஆடம்பரம் ஏதும் இல்லாமல் குதிரைவாகனத்தில் ஏறி ஆடியசைந்து மெல்ல மெல்ல ஊருக்குள் வருகிறார்.உறையூரின் புதுமாப்பிள்ளையாம் நம்பெருமாள் மறுநாள் உத்திரப்பெருவிழாவினை எண்ணி மகாயோசனையில் இருப்பதாக முகபாவனை காட்டும்.

**உத்திர நாளும் வந்ததே!**
அதிகாலையில் நம்பெருமாள் ஆளும்பல்லக்கில் ஆடியசைந்து ஏழு ப்ரகாரங்களையும் வலம் வருவதைக் காண அவசியம் புன்னியம் செய்ய வேண்டும்.திருவரங்க வீதிகளில் பெருமாள் செல்கிறார்.விரைவில் தாயாருடன் செய்யவிருக்கும் ஆன்மீக நாடகத்தினைக் காண தன் பக்தர்களுக்கு அழைப்பு விடுப்பது போல் இது உள்ளது.

திருவீதிகளில் வலம் வந்தபின் தாயார் சன்னிதி வாசலுக்கு வந்தவுடன் கதவுகள் சாத்தப்பட்டு மறுப்பு தெரிவிக்கப் படுகிறது.மட்டையடி,தயிர் வீச்சு நடைபெறுகிறது.தாயாரின் தோழிகளாய் அர்ச்சகர்கள் அழகாக உடையணிந்து,சந்தனம் பூசி நிற்பர்.நம்மாழ்வார் விரைந்து வருகிறார்.,தூது செல்கிறார்.அனைத்து வசனங்களும் அழகாக பேசப்படும்.பொறுமையுடன் கேட்டல் அவசியம்.சரி இனி இந்த திவ்யப்ரணய கலகத்தின் ஆன்மீக தத்துவத்தினை அறிவோமா?

**மனம் படுத்தும் பாடு--------படும் பாடு:**
~* நமக்கு அழகான ஒரு பொருள் எதேட்சயாய்க் கிடைக்கிறது.
*அதன் மீது மனம் மிக்க அன்பை வைக்கிறது,ஆசையையும் பற்றினையும் வளர்த்துக் கொள்கிறது.

*ஒவ்வொரு நாளும் அப்பொருளைப் பற்றிய கனவுகள்,மேலும் அப்பொருளை எப்படி வெகு பத்திரமாக வாழ்க்கையில் பாதுகாப்பது என்றும்,நமக்கே நமக்கு என்று தக்க வைத்துக் கொள்வது என்றும் இரவுபகலாக மனம் திட்டம் போடுகிறது.
*திடீரென்று காலத்தின் கோலமாய் அப்பொருளை இழக்க நேரிடுகிறது.
*அதனால் மனம் படும் பாட்டைக் கூறவும் வேண்டுமோ?

இதே நிலைதான் தாயாரின் மனநிலை.

*இறைவனைக் கணவனாகப் பெற்றாள் தாயார்.

*அவளது எல்லையற்ற அன்பையும் தாய்மையையும் காதலையும் இறைவன் ஏற்கிறார்.
*அவள் இல்லாமல் தான் இல்லறம் செய்வது தர்மம் இல்லை என்ற உயர்ந்த ஸ்தானத்தை அளித்தான்.
*கால ஓட்டத்தில் உறையூர் நாச்சியாருடன் புதிய உறவு உண்டாகிறது.
*அதைக் கேட்டவுடன் தாயாரின் உள்ளம் பதறுகிறது.காரணம்,தன் கணவனின் உடல்,அன்பு,பொருள்,சுகதுக்கங்கள்,மனைவி ஸ்தானம்,தர்மபத்னி பட்டம்,புகழ் என அனைத்தும் வேறொரு பெண்ணுடன் பகிர்ந்து கொள்ள மனம் விடுவதாக இல்லை.

*``ஒருவனுக்கு ஒருத்தி`` என்ற கற்பு நெறியினைக் கையில் வைத்துக் கொண்டு அவள் விவாதிக்கிறாள்.
*தனக்கு எல்லாம் வல்ல கணவனே தன் இறைவன் என்ற எண்ணம் மறந்து அவள் மனம் அவனை ஏற்க மறுக்கிறது.

மேற்கூறிய அனைத்தும் அவளது ஆழ்ந்த பொருள் பற்றினாலே உண்டான சங்கடங்கள் தான்.பற்று என்ற மாயை வலைக்குள் தாயார் தவிக்கிறாள்.அவளால் பெருமாளை ஏற்கவும் முடியவில்லை---------விடவும் முடியவில்லை.அவளது மனம் துடிக்கும் வேளையில் ஞான ஆச்சாரியன் வருகிறார்.அவரது அறிவுரைகளையும் அவளால் உடனே ஏற்க முடியவில்லை.

தான்,நான்,என் கணவன்,கற்பு,பொருள் ,என்ற ஆணவ--கன்ம--மாயைகள் அவளை ஆட்டிப்படைக்கின்றன.ஆனால் அவள் தன் ஆச்சாரியனிடம் செய்து கொள்ளும் சரணாகதியால் மெல்ல ஞானம் பெறுகிறாள்.அதுவே உயர்ந்த ஆன்மீக ஞானம்.

**ஆன்மீகத்தின் தொடக்கமும் முடிவும்:**
சரணாகதியே ஆன்மீகத்தின் ஆணிவேர் ஆகும்.இது ஒரு பயிற்சி.சரணாகதி என்பது நடக்கும் அனைத்து செயல்களையும் இறைவனின் ப்ரசாதமாக ஏற்று விருப்பு வெறுப்பு இல்லாமல் நிம்மதியாக வாழ்வது ஆகும்.வெறுமனே மதத்தோற்றத்தாலும்,நமஸ்காரங்களாலும்,ஆடம்பர பூசைகளாலும் இது வராது.

வாழ்வின் ஒவ்வொரு சிறு செயலிலும் சரணாகதியைப் பயிற்சி செய்ய வேண்டும்.

உதாரணம்:சரியான நேரத்திற்கு வந்தும் பேருந்தைத் தவற விட்டுவிடுகிறோம்.அதனால் டென்ஷன் ஆகாது,``சரி பகவானுக்கு இன்று இதில் நாம் போவது பிடிக்கவில்லை,இதில் ஏதோ ஆபத்துள்ளது..சரி சரி வேறு வழியைக் காணலாம்`` என்று எளிமையாகச் செல்வதே சரணாகதிக்கு எளிய உதாரணம்.

**சரணாகதி எப்படி வரும்?**
ஆச்சாரியன்:மனமே! எல்லாம் இறைவனின் செயல்.

மனம்:அது எப்படி?

ஆச்சாரியன்:அது தானே உண்மை?

மனம்:விளக்கம் தேவை.

ஆச்சாரியன்:நீ வெறும் ஜீவனின் ப்ரதிபலிப்பு,கீவனும் பரமாத்மாவினுள் அடக்கம்.

மனம்:அது எப்படி?

ஆச்சாரியன்:ப்ரபஞ்சத்தில் உள்ள ஒரே நித்ய உண்மை பரமாத்மா.அதன் வெளிப்பாடே அனைத்தும்.

மனம்:புரியவில்லை!

ஆச்சாரியன்:பரமாத்மா சூரியன் .அதை ஒரு கண்ணாடியில் காண்கிறாய்,இப்போது அக்கண்ணாடியை உடைத்து பல துண்டுகளாக்கு.எல்லாத் துண்டுகளிலும் அதே சூரியன் தானே தெரிகிறது?

மனம்:ஆமாம்...

ஆச்சாரியன்:இந்தக் கண்ணாடித் துண்டுகள் தான் இப்ப்ரபஞ்சம்,அதில் உள்ள அனைத்தும்,ஏன் நீயும் கூட அது தான்.

**மனம்:இதன் மூலம் அறிவது யாது?**

ஆச்சாரியன்:எல்லாமே பரமாத்மா தான்.எதுவும் உன்னை விட்டுப்போகவும் இல்லை.ஒரு பாத்திரத்தில் எல்லாவிடத்தும் தண்ணீர் நிறைந்திருப்பதைப் போல் பரமாத்மா உள்ளது.

மனம்:ஆஹா...இப்போது புரிகிறது நானும் பரமாத்வாவும் ஒன்று தான்.

இந்த ஆத்மஞானம் தான் தாயாருக்கு புகட்டப்பட்டது.தானும் பெருமாளும் ஒரே பரம்பொருளின் இருவேறு தோற்றங்கள் என்பதை உணர்ந்த தாயார்,உடனே பெருமாளை ஏற்கிறாள்.

வைகுண்டத்தினும் இனிய இல்லற அற வாழ்வினை அவருடன் திருவரங்கத்தில் வாழ்கிறாள்.பின்னால் ஸ்ரீரங்கநாதர் பல நாச்சியார்களை மணந்தும் ப்ரணயகலகம் வரவில்லை.

தன் கணவன் தன்னிடம் எப்படி நடப்பினும்,தான் ஒரு போதும் தன் அன்பிலிருந்து மாறுவதில்லை என்ற மிக உயர்ந்த சரணாகதி தத்வத்தினைத் தாயார் காட்டுகிறாள்.எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத அன்பை அவள் காட்டுகிறாள்.

மாலரங்கரின் மணிமார்பில் சதா வாசம் செய்யும் பெறும்பேற்றினைப் பெற்றாள்.அவள் எவற்றை எல்லாம் இழந்ததாக நினைத்தாளோ,அவை அனைத்தும் பெருமாளால் பலமடங்கு அவளுக்கு அருளப்பட்டு ,இன்று திருவரங்கநாதரின் மூத்ததிவ்யபட்டமஹிஷியாய்,லோகமாதாவாய் கருணைக் கடலாய் திருவரங்கத்தில் பெருமாளுடன் வெகு உல்லாசமாய் இல்லறம் செய்கிறாள்.

தாயாரே ஜீவன்களின் ப்ரதிநிதி.அவளது திருவடி நம்மையும் பெருமாளுடன் சேர்க்கும்.ஆச்சாரியரின் ஆசீர்வாதத்துடன் திருவரங்க திவ்யத்தம்பதிகளைத் தஞ்சம் புகுவோம்!!!

ஓம் நமோ நாராயணாய நமஹா!

ஒரு உத்திர சேர்த்தியில் ஆச்சாரியரின் அனுமதியுடனும் ஆசியுடனும் திவ்யத்தம்பதிகள் கொண்டாடப் பட்டார்கள் .அக்கொண்டாட்டம் அடுத்த கட்டுரையில் இடம் பெறுகிறது.
நன்றி!!!